# மார்ச் 2017

## வணிகவியல் [XII]

விடைகளுடன்

**[நேரம் : 3 மணி]** **[மொத்த மதிப்பெண்கள்: 200]**

### பகுதி - அ

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**I. கொடுக்கப்பட்ட விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. [40 × 1 = 40]**

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல ?
   அ) தனி நபர் உரிமை
   ஆ) தனி மனித கட்டுப்பாடு
   இ) எல்லா இலாபமும் வணிகருக்கே
   ஈ) நெகிழ்ச்சித் தன்மையற்றது

2. ஒரு பன்னாட்டு நிறுமம் ________ என அழைக்கப்படுகிறது.
   அ) உலக அளவில் பெரியது
   ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுறவு சங்கங்கள்
   ஈ) பொதுக் கூட்டுரு

3. தனியாள் வணிகம் துவங்க :
   அ) குறைந்தது இரு நபர்கள் தேவை
   ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை
   இ) ஒரு நபர் மட்டும் தேவை

4. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள் :
   அ) பேரளவு வியாபாரம் ஆ) நடுத்தர வியாபாரம்
   இ) சிற்றளவு வியாபாரம்

5. தனியாள் வணிகத்தில் :
   அ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலாது
   ஆ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்
   இ) இரண்டுமில்லை

6. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :
   அ) ஒப்பந்தத்தால்
   ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல்

7. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல் :
   அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம்
   இ) 1932 சட்டம்

8. கூட்டாண்மை பதிவு :
   அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின்பேரில்
   இ) அவசியமில்லை

9. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை – A (Table - A) என்பது :
   அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி
   ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி
   ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

10. பங்குகளை ஒறுப்பிழப்பு (பறிமுதல்) செய்யக் காரணம்:
    அ) நிறுமத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல்.
    ஆ) தொடர்ந்து நிறுமத்தின் மூன்று ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் இருப்பது.
    இ) அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறுவது
    ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்.

11. பங்குகளை வட்டத்தில் (Discount - தள்ளுபடி) வெளியிட்டிருக்கும் பொழுது, பங்கொன்றின் முகமதிப்பு ₹ 100 எனில், அனுமதிக்கப்படும் உயர்ந்தளவு வட்டம்.
    அ) ₹ 5 ஆ) ₹ 10
    இ) ₹ 20 ஈ) ₹ 15

12. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் (Debenture-holders) என்பார், அதன்:
    அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள்
    இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில் கடன்

13. ________ எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.
    அ) 10 ஆ) 15
    இ) 20 ஈ) வரம்பில்லை

14. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் _____ மிகக்கூடாது.
    அ) நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டை
    ஆ) செலுத்தப் பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிருப்புத் தொகையில் 11 விழுக்காட்டை
    இ) நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டை
    ஈ) செலுத்தப் பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிருப்புத் தொகையில் 5 விழுக்காட்டை

15. இரு பொது ஆண்டுக் கூட்டங்கட்கு உள்ள இடைவெளி :
அ) 15 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது
ஆ) 12 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது
இ) 18 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது
ஈ) 20 மாதங்கட்கு மேல் செல்லக்கூடாது

16. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது :
அ) சரக்கு ஆ) நிதிப் பத்திரங்கள்
இ) சேவை ஈ) நாட்டின் பணம்

17. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை :
அ) 20 ஆ) 21 இ) 22 ஈ) 24

18. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் :
அ) காளை ஆ) கரடி
இ) கலைமான் ஈ) முட வாத்து

19. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது :
அ) கிராமங்களில் மட்டும்
ஆ) கிராமங்களிலும், நகரங்களிலும்
இ) பெரு நகரங்களில் மட்டும்
ஈ) நகர்ப்புறங்களில் மட்டும்

20. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் :
அ) பொதுக் கழகம் ஆ) துறைவாரி அமைப்பு
இ) அரசு நிறுமம்
ஈ) மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. வேலைப் பகிர்வு முறை என்பது ________ .
22. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப–நட்டம் ________ பகிர்ந்தளிக்கப்படுகிறது.
23. இந்தியாவில் கூட்டாளிகளின் பொறுப்பு ________.
24. வங்கித் தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிக பட்ச உறுப்பினரின் எண்ணிக்கை ________ .
25. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை ________ என்றழைக்கிறோம்.
26. ஒரு பொது வரையறு நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ________ .
27. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது ________ .
28. ₹ 6,000 இயல் மதிப்புடைய பங்குகளை வெளியிட்டிருக்கும் நிறுமத்தில், ஒரு இயக்குநர் வைத்திருக்கவேண்டிய தகுதிப் பங்குகளின் எண்ணிக்கை ________ .
29. இயக்குநர் நிறுமத்தின் ________ பொறுப்புறுதியாண்மையராகவும், அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.
30. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு ________ நாட்களுக்கு முன்னராவது அனுப்பி வைக்க வேண்டும்.
31. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க, வருகை தர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை ________ எனப்படும்.
32. கூட்டுப் பங்கு நிறுமங்களுக்கு ________ தேவை.
33. கடன் பத்திரங்கள் ________ உரிமையைக் குறிக்கும்.
34. போல்ட் என்பது ________ பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.
35. 'கோப்பரெரி' என்ற இலத்தீன் மொழியின் பொருள் ________ .
36. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ________.
37. சிறப்பங்காடிகள் எனப்படுவது பேரளவில் செயல்படும் ________ அமைப்பு.
38. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ________ நிர்வாகம் செய்கின்றது.
39. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ________ .
40. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை ________ எனலாம்.

### பகுதி - ஆ

**குறிப்பு :** (i) ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **நான்கு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **$10 \times 4 = 40$**

41. தர வரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?
42. கர்த்தா என்பவர் யார்?
43. வரையறா பொறுப்பு என்றால் என்ன?
44. கூட்டாண்மை – வரைவிலக்கணம் தருக.
45. வரையறுத்த கூட்டாண்மை என்றால் என்ன? விளக்குக.
46. பங்கு முனைமம் (premium) என்றால் என்ன?
47. குவிவு முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன?
48. பகராள் என்றால் என்ன?
49. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
50. தகவலறிக்கை என்பது யாது?
51. பட்டியலிடுதல் என்றால் என்ன?

52. இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார்?
53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?
54. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்?
55. அரசு நிறுமம் என்றால் என்ன?

**பகுதி - இ**

**குறிப்பு :** (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(ii) ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவிற்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

$5 \times 8 = 40$

56. ஏதேனும் நான்கு அமைப்பின் கோட்பாடுகளைப் பற்றி குறிப்பு வரைக.
57. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?
58. அமைப்பு முறை ஏடு பொருளடக்கங்கள் ஏதேனும் நான்கிற்கு விளக்கம் தருக.
59. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.
60. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?
61. ஊக வணிகர்களின் வகைகளை விவரி.
62. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் எட்டு குறைபாடுகளை விவரிக்க.
63. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகள் ஏதேனும் எட்டினை எழுதுக.

**பகுதி - ஈ**

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(ii) ஒவ்வொன்றிற்கும் **இருபக்கஅளவிற்கு மிகாமல்** விடையளிக்கவும்.

$4 \times 20 = 80$

64. (அ) பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைக் கூறுக. மற்றும் அவற்றில் ஏதேனும் ஐந்து அமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

(ஆ) அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.

65. (அ) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி?

**(அல்லது)**

(ஆ) கூட்டுறவு அமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளைச் சுருக்கமாக வரைக. (ஏதேனும் பத்து)

66. (அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றை விளக்குக. (ஏதேனும் இருபது)

67. (அ) ஒரு நிறுமத்திற்கும், ஒரு கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் பத்து)

**(அல்லது)**

(ஆ) இயக்குநருக்குரிய அதிகாரங்கள் யாவை? அவற்றின் மீது என்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன?

❁❁❁❁

# விடைகள்

## பகுதி - அ

I.

**1.** (ஈ); **2.** (அ); **3.** (இ); **4.** (இ); **5.** (ஆ);
**6.** (அ); **7.** (இ); **8.** (ஆ); **9.** (இ); **10.** (இ);
**11.** (ஆ); **12.** (அ); **13.** (ஆ); **14.** (அ); **15.** (அ);
**16.** (ஆ); **17.** (ஆ); **18.** (அ); **19.** (ஆ); **20.** (இ).

II.

**21.** துறைப்படுத்துதல்
**22.** ஒப்புக்கொண்ட விகிதத்தில்
**23.** வரையறா பொறுப்பு
**24.** 20
**25.** உறங்கும் கூட்டாளி
**26.** ஏழு
**27.** செயல்முறை விதிகள்
**28.** ஒன்று
**29.** முகவர்களாகவும்
**30.** 21
**31.** குறைவெண்
**32.** பேரளவு முதல்
**33.** கடனீட்டு
**34.** மும்பை
**35.** இணைந்து பணியாற்றுதல்
**36.** இராபர்ட் ஓவன்
**37.** சில்லரை வணிகம்
**38.** இயக்குநரவை
**39.** துறைவாரி
**40.** நாட்டுடைமையாக்கம்

**பகுதி - ஆ**

**41. தரவரிசை கோட்பாடு :**

1. ஓர் அமைப்பில், ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும்.

2. இதற்குக் "கட்டளை இணைப்பு" என்று பெயர்.
3. ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்கு ஆணையுரிமை வழங்குகிறார்.
4. அலுவலர் ஒப்படைக்கும் பணியை திறமையாகச் செய்து முடிக்கும் பொறுப்பைப் பணியாளர் ஏற்கிறார்.

**42. கர்த்தா :**

1. இந்துக் கூட்டுக் குடும்ப வணிக முறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர்.
2. அவர்கள் வணிகத்தை குடும்பத்தலைவர் மூலம் நடத்துவர்.
3. குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர்.

**43.** 1. தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
2. இவ்வரையறாப் பொறுப்பினால் தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.
3. கடனீந்தோர் உரிமையாளரின் பிற சொத்துகளையும் பறிமுதல் செய்ய உரிமை பெறுகிறார்.

**44.** 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை சட்டத்தின் 4–வது பிரிவின்படி கூட்டு வணிகம் என்பது "எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" என்று கூறுகிறது.

**45. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை :**

1. ஒரு கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு மட்டும் வரையறுக்கப்பட்டு மற்ற கூட்டாளிகளின் பொறுப்பு வரையறா பொறுப்பாக இருந்தால், அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.
2. இந்தியாவில் வரையறுத்த கூட்டாண்மை உருவாக்க சட்டம் அனுமதி வழங்குவதில்லை.
3. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இவ்வகை கூட்டாண்மை அனுமதிக்கப்படுகிறது.
4. வரையறுத்த கூட்டாண்மையில் பொதுக்கூட்டாளி மற்றும் வரையறு கூட்டாளி என இருவகை கூட்டாளிகள் உள்ளனர்.

**46.** ஒரு நிறுமம் தன் பங்குகளை முனைமத்தில் வெளியிடலாம். அதாவது அதன் வெளியீட்டு விலை முகமதிப்பைவிட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும் குறைவாக உள்ள முகமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாக, முகமதிப்பு ₹ 10 உள்ள பங்கை ₹ 12–க்கு வெளியிட்டால், பங்கு முனைமம் ₹ 2 ஆகும்.

**47.** போதிய இலாபம் ஈட்டாவிடில் இவ்வகைப் பங்குநர்க்கு பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்த ஆண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப் பங்குநர்கட்கு காலாவதி ஆவதில்லை. அவர்களுக்கு செலுத்த வேண்டிய பங்காதாயம் நிலுவையில் இருந்து கொண்டே இருக்கும். வழங்கப்படாத பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமைப்படைத்த பங்குதான் குவி முன்னுரிமைப்பங்குகள் என்று கூறப்படுகிறது.

**48.** ஒரு பொதுக் கூட்டத்தில், தனக்குப் பதில் கலந்து கொள்ள பகராள் ஒருவரை நியமிக்கலாம். பகராள் எனும் சொல், கூட்டத்தில் கலந்து கொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரைக் குறிக்கும். அது மட்டுமல்லாமல், பகராளை நியமிக்கும் அப்பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**49.** ஒரு பொதுவரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டம் சட்டமுறைக் கூட்டம் எனப்படும்.

(i) ஒரு பொதுவரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டம் சட்டமுறைக் கூட்டம் எனப்படும்.
(ii) இது நிறுமங்கள் சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
(iii) நிறுமத்தின் வாழ்வு காலத்தில் ஒரு முறை மட்டுமே இக்கூட்டம் நடைபெறும்.
(iv) தொழில் தொடங்க உரிமைப் பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்கு பின்னர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

**50.** ஒரு நிறுமம் அறிக்கை அல்லது விளம்பரத்தின் மூலமாக பொதுமக்களைத் தன்னுடைய பங்குகளில் முதலீடு செய்யும்படி அழைப்பு விடுக்கும். அவ்வகையான சுற்றறிக்கை அல்லது விளம்பரம் 'தகவலறிக்கை' எனப்படும். இது ஒரு சட்ட ஆவணமாகும்.

**51.** பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே 'பட்டியலிடுதல்' எனப்படும். முந்நாளில், பட்டியலிடுதல் விருப்பச் செயலாக இருந்தது. இன்றைய நாளில் பட்டியலிடுதல் என்பது அனைத்து பொது நிறுமங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**52.** (i) இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறுவு இயக்கத்தை 1844 ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார்.
(ii) இது தான் முதன் முதலில் தொடங்கிய நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும்.
(iii) இராபர்ட் ஓவன் என்பவர் இந்த இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

**53.** (i) கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை உறுப்பினர்களின் பங்களிப்பு அடிப்படையில் தான் பகிர்ந்தளிக்கிறது.
(ii) பங்கு முதல் அடிப்படையில் பகிர்ந்தளிப்பது இல்லை.

(iii) உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவிற்கு பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அடிப்படையில் பங்காதாயம் வழங்கப்படுகிறது. அதனையே ஆதரவுப் பங்காதாயம் என அழைக்கிறோம்.

54. அரசு தனக்கு உரிமையுள்ளதாகவோ, அல்லது தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய தொழிலமைப்புகளையோ இருவகைகளில் உருவாக்கலாம்.

1. அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து அவற்றை மேலாண்மை செய்யும் பொறுப்பையும் மேற்கொள்ளலாம்.
2. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் அதாவது தனியாருக்குச் சொந்தமான தொழில் மற்றும் வாணிக அமைப்புகளை நாட்டுடமையாக்கி அரசு தொழில்களாக அவை செயல்படுமாறு செய்யலாம்.

55. ஒரு நிறுமத்தின் பெரும்பாண்மையான அல்லது முழு பங்குகளையும் மத்திய அல்லது மாநில அரசு பெற்றிருந்தால் அது அரசு நிறுமமாகிறது.

1956ஆம்ஆண்டு இந்திய நிறுமச் சட்டம், "அரசு நிறுமம்" என்பதற்கு வரைவிலக்கணம் அமைத்துள்ளது. அது கூறுவதாவது "மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்த பட்சம் 51 விழுக்காட்டைக் கொண்டிருந்தால் அது அரசு நிறுமமாகும்; அரசு நிறுமத்தின் துணை நிறுமமும் அரசு நிறுமமாகவே கொள்ளப்படும்."

## பகுதி - இ

56. **1. நோக்கங்களின் ஒருமை :**

ஓர் அமைப்பு நிறைவேற்ற இருக்கும் நோக்கம் என்பது, இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு அமைப்பானது அதன் குறிக்கோள்களைத் தெளிவாக முடிவு செய்ய வேண்டும். அமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கையும் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

**2. வேலைப் பகிர்வு :**

தொழில் அமைப்பின் மொத்தப் பணிச் சுமைகளையும் பகிர்வு செய்ய வேண்டும். இது துறைப்படுத்துதல் எனப்படும். அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும். ஒரு சக்தி வாய்ந்த அமைப்பிற்கு சிறப்பு ஈடுபாடு ஏற்புடையதாகும்.

**3. கட்டுப்பாட்டு வீச்செல்லை :**

ஒரு அதிகாரி தன்னால் எத்தனை கீழ்ப்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை குறிப்பது கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் அமைப்பின் மேலாண்மையர் தனக்குக் கீழ் நியாயமான எண்ணிக்கையிலுள்ள கீழ்பணியாளர்களை நிர்வகிக்க வேண்டும்.

**4. தர வரிசை கோட்பாடு :**

ஓர் அமைப்பில், ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும். இதற்குக் "கட்டளை இணைப்பு" என்று பெயர்.

57. **கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் :**

1. நிறுவனத்தின் பெயர்
2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்
3. கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. தொழிலின் தன்மை
5. கூட்டாண்மையின் கால வரையறை
6. கூட்டாளிகள் வழங்கிய முதல் தொகை
7. கூட்டாளிகள் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை
8. இலாபப் பகிர்வு விகிதம்
9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம்
10. முதல் மீது வட்டி
11. எடுப்பு மீது வட்டி
12. கூட்டாளிகள் சேரும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை
13. கூட்டாளிகள் விலகும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை
14. நிறுவனத்தைக் கலைக்கும் முறை
15. நிறுவனக் கலைப்பின் போது கணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறை
16. கணக்கு ஏடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை
17. கூட்டாளிகள் நிறுவனத்திற்கு கொடுத்தக் கடன்கள் மீது வட்டி
18. கூட்டளிகள் நிறுவனத்திற்கு கொடுத்த முன்பணம் மீதான வட்டி
19. கூட்டாளிகள் சேரும் பொழுது, விலகும் பொழுது அல்லது இறக்கும் பொழுது வணிக நற்பெயரை மதிப்பிடும் முறை
20. கூட்டாளிகளிடையே உண்டாகும் தகராறுகளை தீர்க்க நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறை.

58. **அமைப்பு முறை ஏட்டில் காணப்பெறும் பொருளடக்கங்கள் :**

அமைப்பு முறை ஏட்டில் பல உட்பிரிவுகள் உள்ளன.

1. **பெயர் குறித்த உட்பிரிவு :**

நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இப்பிரிவு நிறுமத் தனித் தன்மையை பிறருக்கு அடையாளம் காட்டுகிறது. ஒரு நிறுமம் எந்த ஒரு பெயரையும் தேர்ந்தெடுத்துக்

கொள்ளலாம். விரும்பத்தகாத பெயரை தவிர்த்தல் வேண்டும். பிற நிறுமத்தின் பெயருடன் ஒத்திருத்தல் கூடாது. பொது வரையறு நிறுமமாக இருந்தால் அதன் பெயருக்குப் பின்னால் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தையும், தனி வரையறு நிறுமமாக இருந்தால் பெயருக்குப் பின்னால் "தனி வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தையையும் சேர்க்க வேண்டும்.

2. **இடங்குறித்த உட்பிரிவு :**
பதிவு அலுவலகம் அமைந்துளள மாநிலத்தின் பெயர் இங்குக் கொடுக்கப்பட்டிருக்கும். முகவரி கொடுக்கப்பட வேண்டியதில்லை.

3. **நோக்கம் குறித்த உட்பிரிவு :**
நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் இதில் கூறப்பட்டிருப்பதால், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாக இது கருதப்படுகிறது. இதில் குறிப்பிடப்பெறாத எச்செயலிலும் (எத்தொழிலிலும்) நிறுமம் ஈடுபடக் கூடாது. அதாவது, இது நிறுமத்தின் செயல் எல்லைகளை உள்ளடக்குவது, முக்கிய நோக்கங்கள், துணை நோக்கங்கள் எனப் பிரித்துக் காட்டப்படும்.

4. **பொறுப்பு குறித்த உட்பிரிவு :**
இங்குதான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்புள்ளாக நேரிடும் பொழுது, நிறுமச் சொத்துக்கள், அதன் கடன்களை அடைக்கப் போதுமானதாக இல்லா நிலையில், ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டு வருவதாக உறுதியெடுத்துக் கொண்ட தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

59. **பங்குகளை வட்டத்தில் வெளியிட சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன : அவை,**

1. வட்டத்திற்கு வெளியிட்டுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். ஆக, முதன்முதலில் வெளியிடும் பொழுதே ஒரு நிறுமம் தன் பங்குகளை வட்டத்தில் வெளியிடக்கூடாது. கூடுதல் முதல் திரட்ட மறுபடியும் அதே வகைப் பங்குகளை வெளியிடும் போது வட்டத்தில் வெளியிடலாம்.
2. சாதாரணத் தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும்.
3. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.
4. நிறுமம் நிறைவேற்றிய தீர்மானத்தில் உயர்ந்தளவு தள்ளுபடி வீதம் எவ்வளவில் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். பங்கு ஒன்றின் முக மதிப்பிலா 10 விழுக்காட்டுக்கு மிகக் கூடாது. சில சிறப்பான சூழ்நிலைகளில், மைய அரசு இதை விடக் கூடுதல் வீதத்தில் வட்டம் அல்லது தள்ளுபடி அளிக்க அனுமதி வழங்கும்.
5. நிறுமம் தொழில் தொடங்க உரிமை கிடைத்த நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது முடிந்து இருக்க வேண்டும்.
6. மைய அரசு அனுமதித்த நாளிலிருந்து இரு மாதங்களுக்குள் பங்குகளை வட்டத்தில் வெளியிட வேண்டும்.

60. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக நிறுமத்தின் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் நியமனம் பெறுகின்றனர். செயல்முறை விதிகள் இது குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை எனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பம் இட்டவர்கள் நிறுமத்தின் முதலாம் இயக்குநர்களாக கருதப்படுவர்.

(i) **நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள் :**
பின்னர் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர்.

(ii) **இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள் :**
(அ) கூடுதலான இயக்குநர்கள் வேண்டப்படின் கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம்.
(ஆ) இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில் அவ்வப்போது தற்காலிகமாக எழும் காலி இடங்களை, இயக்குநரவையே நியமிக்கலாம்.
(இ) செயல்முறை விதிகள் அதிகாரம் அளிக்குமானால் மாற்று இயக்குநர்களையும் இயக்குநரவை நியமிக்கலாம்.

(iii) **மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள் :**
செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கி இருக்குமாயின், நிறுமத்திற்கு தொழிலை விற்றவர், அல்லது நிறுமத்திற்கு கடன் வழங்கி இருக்கும் வங்கி அல்லது நிதிநிறுவனங்கள் இயக்குநரவைக்குத் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம்.

(iv) **மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள் :**
நிறும சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் அல்லது நிறுமத்தில் குறைந்தது 100 உறுப்பினர்கள் அல்லது மொத்த வாக்கு எண்ணிக்கையில் 10 சதவீதம் அளவிற்கு வாக்கு வைத்திருக்கும் உறுப்பினர்கள் விண்ணப்பத்திருப்பின் அதனடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கும்.

61. **ஊக வணிகர்களின் வகைகள் :**
இந்தியாவில் பங்கு மாற்றகங்களில் நான்கு வகையான வணிகர்கள் செயல்படுகின்றனர். அவர்கள்

1. **காளை :**
பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்றழைக்கப்படுகிறார். இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார். ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்த வகை ஊக வணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

2. **கரடி :**
கரடி அல்லது மண்டிவாலா என்றழைக்கப்படும் ஊக வணிகர், எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். அப்பங்குகளைத் தற்போது விற்று பின்னர் அவைகளைக் குறைந்த விலையில் வாங்கும் எண்ணத்தில் செயல்படுவார். இவ்வகை ஊக வணிகர், பங்குகளைப் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தான் கொண்டிராத பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வார். ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது. அதேபோல ஒரு கரடி ஊக வணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

3. **கலைமான் :**
கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு கோரி விண்ணப்பம் செய்வார். தனக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவற்றை முனைமம் பெற்றுக் கொண்டு விற்று விடுவார். எந்த நிறுமங்களின் பங்கு வெளியீடு பொதுமக்களால் விரும்பப்படுகிறது. முனைமத்துடன் விற்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து அந்நிறுமங்களை தேர்வு செய்வார். ஒதுக்கீட்டுப் பணம் கட்ட அழைப்பு வருமுன்னரே பங்குகளை இவ்வகை ஊக வணிகர் விற்றுவிடுவார். இவர் 'முனைம வேட்டையாளர்' என்றும் அழைக்கப்படுகிறார்.

4. **முட வாத்து :**
தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்ப்பாடுகளை தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார். கரடி ஊக வணிகர் பின்னர் கொடுப்பதற்காகத் தற்போது பத்திரங்களை விற்பார். ஆனால் குறிப்பிட்ட நாளில் பங்குகளை வைத்துள்ள எவரும் அதை விற்க விரும்பாததால் எந்த விலையிலும் வாங்குவதற்கு எந்த ஒரு பங்கும் கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார். மேலும் பங்குகளை இவரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்தவரும் ஒப்பந்தத்தின் தீர்வைத் தள்ளி வைக்க விரும்பாததால் இவ்வகை ஊக வணிகர் போராட வேண்டியதாகிறது.

62. **பின்வருபவை கூட்டுறவுச் சங்கத்தின் குறைபாடுகள் :**

1. **திறமையற்ற மேலாண்மை :**
கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மேலாண்மையைத் திறம்படச் செய்ய ஆர்வமில்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள, அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது.

2. **வரையறு முதல் :**
குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவுச் சங்கங்கள் வழக்கமாக அமைக்கப்படுகின்றன. ஒரு நபர் ஒரு வாக்கு முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடை செய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலீடுகளால் சிரப்படுகிறது. பேரளவுத் தொழில் செய்யப் போதுமான முதல் தொகை இவ்வமைப்பால் திரட்ட முடிவதில்லை.

3. **தக்க தூண்டுகோல் இல்லாமை:**
இலாப நோக்கு இல்லாமையும் குறைந்தபட்ச 14 விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்புக் குறைய காரணமாகிறது. பணியாளர் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.

4. **ஒற்றுமையின்மை :**
சில வேளைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

5. **அசைக்க முடியாத மனிதர்களின் அதிகாரம் :**
அரசியல் சார்பில்லாத கூட்டுறவுச் சங்கத்தில் சில உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கோடு அமைப்பை மேலாண்மை செய்கின்றனர். அவர்கள் இவ்வமைப்பை சொந்த சொத்து போல் சுரண்டும் வாய்ப்பு உண்டு.

6. **உரிமையை மாற்ற இயலாமை :**
கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளை சங்கத்தில் திருப்பிக் கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம்.

7. **இரகசியம் காவாமை :**
கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் சங்கக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் சங்க ஏடுகளை பார்வையிடவும் சுதந்திரம் உண்டு. இதனால் செயல்முறை இரகசியங்கள் மறைக்காப்பாக வைத்திருக்க இயலாது.

8. **அதிகமான அரசு தலையீடு :**
கூட்டுறவு அமைப்பின் தினசரி நடவடிக்கைகள் அரசின் சட்டப்படியும் கட்டுப்பாட்டுக்குட்பட்டும் நடத்தப்படுகின்றன. கூட்டுறவு சங்க பதிவாளரிடம் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். காலம் தாழ்த்தும் நடைமுறைகளும், நெகிழ்வுத் தன்மையின்மை, தூண்டுகோலின்மையும் அமைப்பின் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

63.

| வ. எண் | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | சேவை நோக்கம் – இத்துறைக்கு இரட்டை நோக்கங்கள் உள்ளன, பொருளாதார முன்னேற்றத்தை அடைதல் மற்றும் மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வு இல்லாத நிலையை ஏற்படுத்துதல் ஆகியவை | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| 2. | போதிய அளவு மற்றும் வரையறா நிதி, மக்களின் சேமிப்பை வங்கி, கடன்பத்திரம் வாயிலாக வெற்றிகரமாகத் திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி, நாட்டு மக்களின் சேமிப்பைத் திரட்டுவதிலோ வெளி நாட்டிலிருந்தோ உதவி பெறுவது இதற்கு எளிதல்ல. |
| 3. | ஒரு சிலரிடம் செல்வமும் வருமானமும் செறிவடைவதைத்தடுக்க முடியும். | பொருளாதார வலிமை செறிவடைவதைத் தூண்டுகிறது. |
| 4. | தனியார் துறையினரால் புறக்கணிக்கப் பட்ட தொழில்களை ஏற்று நடத்துதல். | தனியார் துறை எப்பொழுதும் அபாயம் குறைவாக உள்ளதும் மற்றும் இலாபம் அதிகமாக உள்ள தொழில்களை மட்டுமே நடத்தும். |
| 5. | நாட்டின் வளங்களைப் பாதுகாக்கின்றன. | காடுகள், சுரங்கங்கள் போன்றவற்றைத் தனியார் துறை தன் சுயநலத்திற்காகச் சுரண்டுகிறது. |
| 6. | பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனத்தைத் தொடங்கி அனைத்துப் பகுதிகளும் சமமக வளர்ச்சி பெறச் செய்யப்படுகின்றது. | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்புவதில்லை. |
| 7. | அடிப்படைத் தொழில்கள், இராணுவத்தைச் சார்ந்த தொழில்கள்அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறையில் உள்ளது. | நுகர்வோர் பொருட்கள், விவசாயம் போன்றவை தனியார் துறைக்கு விடப்பட்டுள்ளன. |
| 8. | நுகர்வோர்களின் நலனைக்காப்பது இதன் தலையாய பணியாகவுள்ளது.அவர்களுக்குத் தரமான பொருட்களையும் பணியினையும்குறைந்த விலையில் பொதுத்துறை வழங்குகிறது. | நுகர்வோர்கள் சுரண்டப்படுகின்றனர். |

## பகுதி - ஈ

**64. (அ) பல்வேறு வகையான தொழில் வடிவமைப்பு:**

**வணிக அமைப்பு**

| **தனிநபர் நிறுவனங்கள்** | **அரசு நிறுவனங்கள்** |
|---|---|
| 1. தனி வணிகர் | 1. துறை அமைப்பு |
| 2. இந்து கூட்டுக் குடும்பம் | 2. பொதுக் கூட்டுரு |
| 3. கூட்டாண்மை | 3. அரசு நிறுமம் |
| 4. கூட்டுப் பங்கு நிறுமம் | 4. வாரிய அமைப்புகள் |
| 5. கூட்டுறவு அமைப்புகள் | |
| 6. பன்னாட்டு நிறுமங்கள் | |

**தனி நபர் நிறுவனங்கள் :**

1. **தனி வணிகர் :**
இது தனி நபரால் உருவாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படும் வணிக அமைப்பு ஆகும். இது தொழில் அமைப்புகளில் பழமையான வடிவம் ஆகும். இதன் உரிமையாளர் தனி வணிகர் என அழைக்கப்படுகிறார். இவர் தனது சொந்த முதல், தொழில் திறன், அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு தானே வணிகத்தை நடத்துகிறார்.

2. **இந்து கூட்டுக் குடும்பம் :**
இந்து கூட்டுக் குடும்ப வணிக முறையில், குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். இந்து கூட்டுக் குடும்ப வணிக முறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். இக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம் கைத்தொழில்கள், சிறு தொழிற்சாலை போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும். இத்தகைய அமைப்பிற்கு இந்துக் கூட்டுக் குடும்ப வணிகம் என்று பெயர். இது இந்தியாவில் மட்டுமே காணப்படும்.

3. **கூட்டாண்மை :**
   1. கூட்டாண்மை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்படுவதாகும்.
   2. குறைந்தது இருவரும் அதிகபட்சமாக வங்கித் தொழிலாளியின் பத்து நபர்களும் பிற தொழிலாக இருந்தால் இருபது நபர்கள் வரை இருக்கலாம்.
   3. கூட்டாளிகள் இலாபம் அல்லது நட்டத்தை ஒப்புக் கொண்ட விகித்தத்தின்படி பகிர்ந்து கொள்வர்.
   4. கூட்டாண்மையில் பங்கெடுத்துக் கொள்ளும் நபர்களுக்கு கூட்டாளி என்று பெயர்.
   5. கூட்டாளிகளின் அமைப்புக்கு நிறுவனம் என்று பெயர்.
   6. ஒவ்வொரு கூட்டாளிக்கும் வியாபார மேலாண்மையில் பங்கெடுத்துக் கொள்ள உரிமை உண்டு.

4. **கூட்டுப் பங்கு நிறுமம் :**
கூட்டுப் பங்கு நிறுமம் என்பது பல நபர்களின் சங்கமாகும். ஒரு நிறுமத்தின் முதல் தொகை பல அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு அலகு ஒரு பங்கு எனப்படும். பங்குகளை வைத்திருப்பவர் அல்லது வாங்குபவர் பங்குதாரர் என அழைக்கப்படுகிறார். ஒரு நிறுமம் என்பது புனைவு நபர் என அழைக்கப்படுகிறது. இந்திய நிறுமச் சட்டம் 1956ன் படி கூட்டுருவாக்கப்படுகிறது.

5. **கூட்டுறவு அமைப்புகள் :**
கூட்டுறவுச் சங்கம் என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் தங்களது பொருளாதார மேம்பாட்டிற்காக ஒன்று சேரும் தன் விருப்ப மன்றம் ஆகும். ஒரு கூட்டுறவு சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் சமம். ஒரு நபர் ஒருவாக்கு, என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது.

**அரசு நிறுவனங்கள் :**

1. **துறைமுறை அமைப்பு :**
மத்திய அரசு அல்லது மாநில அரசால் நடத்தப்படுவது ஆகும். அமைச்சகத்தின் நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது. (எ.கா) இரயில் போக்குவரத்து, தொலைபேசி, தொலைக்காட்சி.

2. **பொதுக் கூட்டுரு :**
இது தனிச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டமுறைக் கழகமாகும். தனிச் சட்டத்திலேயே இதனுடைய நோக்கம், அதிகாரங்கள், பணிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். இது பணியில் அமர்த்தப்பட்ட இயக்குநர் குழுவால் நிர்வாகம் செய்யப்படுகிறது. (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா.

3. **அரசு நிறுமம் :**
இந்திய நிறுமச் சட்டம் 1956 இன் படி மத்திய மற்றும் மாநில அரசுகள் தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 விழுக்காடு கொண்டிருந்தால் அரசு நிறுமம் ஆகும். (எ.கா) இந்துஸ்தான் ஸ்டீல் வரையறு நிறுமம், பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் வரையறு நிறுமம்.

4. **வாரிய அமைப்புகள் :**
இதன் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (எ.கா.) தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

**(அல்லது)**

64. (ஆ)

1. **பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது :**
இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர், இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். இலாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத – அதே சமயம் நாட்டுக்குத் தேவையான – தொழில்களில் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள். தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. அத்தகைய நிறுவனங்கள் நாட்டில் பல துறை தொழில் வளர்ச்சியடைய ஏற்படுத்த உதவுகின்றன.

2. **அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி :**
பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படைத் தொழில்கள் எனலாம். எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு ஆலைகள், வேதியியல் தொழில்கள் போன்றவை அடிப்படைத் தொழில்களாகும். இத்தகைய தொழில்கள் அரசுத் தொழில்களாகவே இருப்பதே சாலச்சிறந்தது.

3. **பேரளவு முதலீட்டு நிறுவனங்கள் :**
சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டும். மேலும், அந்நிறுவனங்களில் தொழில் உற்பத்தித் தொடக்கக் காலம் (gestation period) நீண்டதாக இருக்கும். தனியார் தொழில் முனைவோர்களால் அப்பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது. எடுத்துக்காட்டாக , இரயில், கப்பல் கட்டுவது, மின்சக்தி ஆகிய தொழில்களுக்கத் தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டாளர்களால் அளிக்க இயலாது. எனவே, அத்துறையில் அரசே தனக்கச் சொந்தமான நிறுவனங்களை ஏற்படுத்தும்.

4. **இன்றியமையாத வசதிகளை நல்குவது :**
குடிநீர், மின் உற்பத்தி, மின்சக்தி, எரிவாயு, போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும். இன்றியமையாத வசதிகள் ஆகும். இத்தேவைகள் மிகக் குறைந்த விலையில் பூர்த்தி செய்யப்படவேண்டும். எனவே இவ்வசதிகளைச் செய்து தரும் அமைப்புகள் அரசுத் தொழில்களாகவே இயங்க வேண்டும். இத் தொழில்களில் பொது மக்களின் நலன் பெரிதும் பாதிக்கப்பட கூடிய வாய்ப்புகள் இருப்பதால் அவற்றைத் தனியாரிடம் ஒப்படைக்க இயலாது.

5. **முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்துவது :**
ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலிலிருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது. நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த தொழில்கள் தனியார் வசமிருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும்பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்புண்டு. அல்லாமலும் அவர்கள் நாட்டின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது. எனவேதான் பாதுகாப்புத்தொழில்களை எப்போதும் அரசே ஏற்று நடத்தி வருகிறது.

6. **அனைத்துப் பகுதிகளும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல் :**
தொழில், உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்குத் தேவையான அனைத்து உற்பத்தித் தொழில்களை ஏற்படுத்துவதேயாகும், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தனியார் துறையினர்,இலாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத, மற்றும் நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை. இப்பகுதிகளில் தொழில்களை அமைக்கத் தனியார் துறையினரை அரசு ஊக்குவிக்கலாமே தவிர, கட்டாயப்படுத்த முடியாது. அந்நிலையில் அரசு அங்குதொழில்களை நிறுவுவது சாலச் சிறந்தது.

7. **இயற்கை வளங்கள் தோண்டியெடுத்தல் :**
நாட்டில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள் வளங்களைத் தோண்டியெடுக்கும் தொழில்களில் முதலீடு செய்து நட்டத்தை ஏற்றுக்கொள்ள தனியார் துறையினர் விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிஷன், புது தோற்றுவாய்களை (Sources) கண்டுபிடிப்பதற்காகப் பேரளவு தொகையினைச் செலவிடுகிறது. புதுத் தோற்றுவாய்களைத்தேடும் கட்டத்திற்காக அத்தகைய பேரளவு செலவினைத் தனியார் துறையால் செய்ய இயலாது.

8. **பொருளாதார வலிமை செறிவதைத் தடுத்தல் :**
உற்பத்தி தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய இலாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொதுமக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர். தனியார் துறை அவ்வாறு இலாப நோக்கோடு செயல்படும்போது, அதன் விளைவாகப்பொருளாதார வலிமை அவற்றிடம் மேன்மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம். அரசு, தொழில் துறையில் நுழைந்து தொழில்களைச் சொந்தமாக்கிக் கொள்வதால், இச்செறிவைக் குறைப்பதோடு பொருளாதாரத்தையும் அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலும்.

9. **நிறை வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் :**
நிறை வேலைவாய்ப்புப் பொதுவுடைமை உற்பத்தியினாலேயே ஏற்படும் முழு வீச்சில் செயல்படும் தனியார் துறையைப் பெற்றுள்ள

வளர்ச்சியடைந்த நாடுகள்கூட நிறை வேலை வாய்ப்பைப் பெறுவதில்லை. நாட்டிலுள்ள வளங்கள்அனைத்தும் நன்கு பயன்படுத்தப்பட்டால் தான் பொருளாதார வளர்ச்சி விரைவாக ஏற்படும். இதற்கு அரசு பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தித் திட்டங்கள் தீட்டவேண்டும். இப்பணிகளின் ஒரு பகுதியாக அரசே தொழில்களையும் நடத்த வேண்டும்.

10. **அரசின் வருவாயைப் பெருக்குதல் :**
சில அரசு நிறுவனங்கள் வணிகக் கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும். அந்நிறுவனங்களின் வருவாய் அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்படும். இவ்வாறு அரசின் நிதி நிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் நிறைவேற்றப் பயன்படுத்தப்படுகிறது. அது மக்கள் வாழ்க்கைத் தரம் உயர உதவும். கல்வி, மருத்துவம், வீடு போன்ற பொதுநலப் பணிகளுக்கும் இவ்வருவாய் செலவிடப்படுகிறது.

11. **பொதுவுடைமைப் பாங்கான சமுதாயத்தை அமைப்பது :**
பொதுவுடைமைப் பங்கான சமுதாயத்தில் ஏழை, பணக்காரர்களுக்குமிடையே உள்ள (மக்களிடையேயுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு) வேறுபாட்டினை அரசு களைவதுமில்லாமல், உற்பத்தி வழிமுறைகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். முதலாளித்துவ சமுதாயத்தில் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும், செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகவும் ஆகின்றனர். மக்களிடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்க, பொதுத்துறை நிறுவனங்கள் அவசியமாகின்றன.

65. (அ)

**சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு :**

நுகர்வோர்கள் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள். இவர்கள் தான் வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள். வியாபாரிகள் நுகர்வோரின் தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைபூர்த்திசெய்கின்றனர். நுகர்வோருக்குத் தேவையான சரக்குகள், சேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதில் தனி வணிகர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அன்றாடம் நுகர்வோருக்குத் தேவையான உணவு வகைகள், துணி வகைகள், எழுது பொருட்கள், சலவை, மளிகைப் பொருட்கள், புத்தகங்கள், செய்தித்தாள்கள், மருந்து பொருட்கள் முதலியன தனியாள் வணிகரால் அளிக்கப்படுகிறது. இவ்வகைப் பொருட்களை வழங்கும் தனி வணிகர்கள் சமுதாயத்தால் மதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு தனியாள் வணிகர் சமுதாய நலன் காப்பதில் பொறுப்பேற்கிறார். எனவே இவ்வகையான தொழில் அமைப்புகள் சமுதாயத்தாலும் விரும்பப்படுகிறது. சமுதாயத்திற்கு சேவை செய்வதில் தனிவணிகரின் பங்கு முக்கியமானது. கீழ்கண்ட வழிகளில் தனி வணிகர்கள் சமுதாயத்திற்கு தங்கள் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

1. **வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு :**
குறைந்த கல்வி அறிவு உடையவருக்கும், கல்வி அறிவு இல்லாதவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கின்றனர்.

2. **முதலீட்டிற்கான வாய்ப்பு :**
சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தனிவணிகத்தை தொடங்க முடிகிறது. அதன் மூலம் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த முடிகிறது.

3. **குறைந்த விலையில் பொருட்களை அளித்தல் :**
நிர்வாக செலவு குறைவாக உள்ளதால் பொருட்களை குறைவான விலைக்கு விற்பனை செய்யமுடிகிறது.

4. **சிறு உற்பத்தியளாருக்கு உதவுதல் :**
உள்ளூர் உற்பத்தியளரிடமிருந்து பெரும்பான்மை பொருட்களை வாங்கி விற்பனை செய்வதால், அவர்கள் பயன்பெறுகிறார்கள்.

5. **தரமான பொருட்களை அளித்தல் :**
வியாபார நற்பெயரைக் காக்க தரமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

6. **தர்ம சிந்தனை உடைய நடவடிக்கைகள் :**
தனியாள் வணிகர்கள் குழுக்களாக இணைந்து பள்ளிகளுக்கு தேவையான வசதிகள் செய்தல், கண் பரிசோதனை முகாம்கள் நடத்துதல், சாலை மற்றும் பூங்காக்களை பராமரித்தல் போன்ற சமுதாய தொண்டுகளை செய்கின்றனர்.

7. **வருமானம் மற்றும் வளங்களை சமமாகப் பகிர்ந்தளித்தல் :**
தனியாள் வணிகத்தில் பலர் ஈடுபட வாய்ப்பு உள்ளதால் வருமானமும் வளங்களும் சமமாகப் பகிர்ந்துக் கொள்ளப்படுகிறது.

8. **நுகர்வோருக்கு உதவுதல் :**
நுகர்வோரின் வீட்டிற்கே பொருட்கள் கொண்டு செல்லப்படுவதால் நுகர்வோரின் நேரமும் உழைப்பும் மிச்சமாகின்றன.

**(அல்லது)**

65.(ஆ) **கூட்டுறவு அமைப்பின் இயல்புகள் :**
உறுப்பினர்களின் நலனைப் பாதுகாக்க கீழ்காணும் தத்துவங்களின் அடிப்படையில் பணிபுரிகிறது. கூட்டுறவு அமைப்பின் சிறப்பியல்புகளை கீழ்கண்டவாறு அறிந்து கொள்ளலாம்.

1. **தன்னிச்சையாகச் சேரும் சங்கம் :**
பலர் தன்னிச்சையாகச் சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும். இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேருமாறு ஒருவரை கட்டாயப்படுத்த முடியாது. ஒரு நபர் எப்போது வேண்டுமானலும் இச்சங்கத்தில் சேரலாம். அது போலவே விரும்பும் போது அவர் அதிலிருந்து விலகலாம்.

2. **சமத்துவம் :**
கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சரி சமம். எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு. அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்குக் கிடையாது.

3. **மக்களாட்சி முறையில் மேலாண்மை :**
கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. ஆளுக்கொரு வாக்கு என்ற சமத்துவ அடிப்படையில், மக்களாட்சி முறையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்தப்படுகிறது. உறுப்பினர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மேலாண்மை செய்யும் பொறுப்பை ஒப்படைக்கின்றனர்.

4. **வளங்களின் இணைப்பு :**
இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது. அவர்கள் எல்லா உறுப்பினர்களின் நலனுக்காவும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

5. **ஒருமுனைப்படுத்திய முயற்சி :**
இந்த அமைப்பில் எல்லாத் தனி நபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர். கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருக்காக.

6. **சேவையின் தத்துவம் :**
கூட்டுறவு அமைப்பின் முதன்மை நோக்கம் சேவை புரிவது, இலாபம் ஈட்டுவது இரண்டாவது நோக்கமாகும். உறுப்பினர்களுக்குத் தேவையான சேவையை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. கடன் வசதி அளித்தல், வீடு கட்டுவதற்குக் கடன் வழங்கல், விதைகள், உரங்கள் அளித்தல் போன்ற சேவைகள் இந்தச் சங்கங்களால் வழங்கப்படுகின்றன.

7. **பன்மர் உறுப்பினராதல் :**
பன்மர் இணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவு அமைப்பு ஒரு அமைப்பை உருவாக்கக் குறைந்தபட்சம் 25 நபர்கள் தேவை. அதிக பட்சம் அதில் எத்தனை பேர் உறுப்பினராகலாம் என்பதற்கு வரையறை ஏதும் இல்லை.

8. **சட்டத் தகைமை :**
கூட்டுறவில் உறுப்பினர்கள் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குரிய சட்டத் தகுதி பெற்றிருக்க வேண்டும். சங்கத்தின் சட்டதிட்டங்கள், விதிகள் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டு கட்டுப்பட வேண்டும். கூட்டுறவு சங்கத்தை அமைக்கும் உறுப்பினர்களின் சட்டத் தகுதி என்பது அவர்கள் வயது உரிமை பெற்றவராக இருப்பதாகும்.

9. **உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு :**
பொதுவான பொருளாதார நோக்கமுள்ள ஆண், பெண் எவரும் இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேரலாம். சாதி, சமய பாகுபாடுகள் ஏதுமின்றி எவரும் உறுப்பினராகலாம். பெரிய பணக்காரரும், வறிய ஏழையும் அதில் உறுப்பினராகலாம். கல்லாமை உறுப்பினராவதற்கு தடையாக இருப்பதில்லை.

10. **நிதி :**
கூட்டுறவுச் சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கமும் தனது பங்கு முதலை உறுப்பினர்களிடமிருந்து திரட்டுகிறது. பங்குகளின் முகமதிப்பு மிகக் குறைவானதாக இருக்கும். ஒரு நபர் இச்சங்கத்தின் பங்குகளை வாங்குவதன் மூலம் உறுப்பினராகலாம்.

**66. (அ)**

**கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

1. **கூட்டாளிகளின் உடன்பட்டால் (பிரிவு 40) :**
ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது மற்றும் கலைக்கப்படுகிறது. அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

2. **கட்டாயக் கலைப்பு (பிரிவு 41) :**
அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லாக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாகக் கலைக்கப்படும். மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாகக் கலைக்கப்படும். எடுத்துக்காட்டாக, மதுவிலக்குச் சட்டம் இயற்றப்படுதல், மற்றொரு நாட்டுடன் போர் ஏற்படுதல்.

3. **சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு 42) :**
கீழ்காணும் நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் நிறுவனம் கலைக்கப்படலாம்.
   (அ) ஒரு கூட்டாளி இறந்துவிடின்
   (ஆ) குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின் அக்காலம் முடிவடைந்தவுடன்
   (இ) சில குறிப்பிட்ட தொழில்களை செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்ற உடன்

(ஈ) ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக நீதிமன்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின் கூட்டாண்மைக் கலைக்கப்படும்.

4. **விருப்பமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு (பிரிவு 43) :**
விருப்பமுறிக் கூட்டாண்மையில் கூட்டாளி எவரேனும் நிறுவனத்தைக் கலைக்கும்படி பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால், நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.

5. **நீதிமன்றத்தால் கலைப்பு (பிரிவு 44) :**
நீதிமன்றத்தால் கூட்டாளி ஒருவர் கீழ்க்காணும் காரணங்களுக்காக வழக்குத் தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

**(அ) கூட்டாளியின் மனச்சமநிலை இழப்பு :**
கூட்டாளிகளுள் எவரேனும் ஒருவர் பித்து நிலையடைந்தால் நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(ஆ) நிலையான திறமையின்மை :**
கூட்டாளி ஒருவர் திறமையாக தொழில் செய்யும் நிலையை இழந்திருந்தால், நீதிமன்றம் கலைப்பதற்கான ஆணை பிறப்பிக்கும்.

**(இ) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை :**
கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக் கொண்டிருந்தால், அவருடன் கூட்டாண்மைத் தொழில் செய்வது இயலாதென ஏனைய கூட்டாளிகள் கருதினால், அவர்களுள் எவரேனும் ஒருவர் கூட்டாண்மையைக் கலைக்கக் கோரி நீதிமன்றத்தை அணுகலாம்.

**(ஈ) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு :**
கூட்டாளிகளுள் ஒருவர் ஒழுக்கக்கேடான குற்றத்ததை செய்திருப்பின், ஏனைய கூட்டாளிகளுள் ஒருவர் கலைப்புக்கோரி வழக்குத் தொடுக்கலாம்.

**(உ) உரிமை மாற்றம் :**
கூட்டாளி ஒருவர் தொழிலில் தனக்குரிய உரிமையை முழுவதையும் மூன்றாமவர் ஒருவருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால், ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையைக் கலைக்கக் கோரி நீதிமன்றத்தை அணுகலாம்.

6. **நீதி நேர்மை அடிப்படையில் :**
நிறுவனத்தைக் கலைத்திட போதிய அடிப்படை காரணமுள்ளது என்று நீதிமன்றம் கருதினால் கூட்டாண்மை கலைக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, அ, மற்றும் ஆ என்போர் ஒரு கூட்டாண்மையின் இரு கூட்டாளிகள் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில்லை எனில் நீதிமன்றம் நிறுவனத்தைக் கலைத்திட ஆணையிடலாம்.

**(அல்லது)**

**66. (ஆ)**

**இந்தியப் பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியம் :**
(SEBI - Securities and Exchange Board of India)

இந்தியப் பங்கு சந்தையின் வளர்ச்சிக்காகப் பங்கு மாற்றகங்களின் செயல்களை ஒழுங்குபடுத்த சுதந்திரமான ஒரு தனி அமைப்பின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவருதல் அவசியமாகிறது. எனவே மத்திய அரசு இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியத்தை ஏற்படுத்தியது.

**செபி (SEBI) :**
April 1988 –ல் ஒரு நிர்வாக அமைப்பாகச் செபி ஏற்படுத்தப்பட்டது. 30.01.1992 அன்று இந்திய பாராளுமன்றத்தில் செபி சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் இதற்குச் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

**நோக்கம் :**
செபியின் அடிப்படை நோக்கங்களாவன,

1. முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்.
2. பத்திரச் சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், அதனைச் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

**செபியின் முக்கிய கூறுகள் (இயல்புகள்) :**

1. செபி, சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரையைக் கொண்ட ஒரு கூட்டுறுவாக்கமாகும்.
2. செபியின் தலைமை அலுவலகம் மும்பையிலும் கிளை அலுவலகங்கள் இந்தியாவின் மற்ற நகரங்களிலும் இயங்கும்.
3. இவ்வாரியம் கீழ்கண்ட உறுப்பினரைப் பெற்றிருக்கும்.
   (அ) சபைத்தலைவர்
   (ஆ) நிதி மற்றும் சட்ட அமைச்சக அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.
   (இ) ரிசர்வ் வங்கி அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்
   (ஈ) மேலும் இரண்டு உறுப்பினர்கள் சபைத் தலைவர் மற்றும் வாரியத்தின் ஐந்து உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.
4. செபியின் பொதுக் கண்காணிப்பு, வழிகாட்டுதல் (ஆணை), மேலாண்மை ஆகியவை உறுப்பினரவையிடம் இருக்கும். இவ்வுறுப்பினர்களவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிறைவேற்றும்.

5. வாரியத்தின் சபைத் தலைவரையும் , மற்ற உறுப்பினர்களையும், அப்பொறுப்பிலிருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு.
6. மத்திய அரசு நிதியுதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.
7. செபியின் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிற்கான ஆணைகள் வழங்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு வாரியம் தவறுகள் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

**பணிகள் :**

பத்திரங்களின் சந்தையை வளர்ச்சியடையச் செய்யவும், அதன் செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும், செபி வாரியம் கீழ்காணும் செயல்களில் ஈடுபடுகின்றது.

1. பங்கு மாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2. இடைத்தரகர்களான பங்குத் தரகர்கள், துணைத் தரகர்கள், வெளியீட்டு வங்கியர், ஒப்புறுதியாளர்கள் மற்றும் பத்திரச் சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3. பரஸ்பர நிதியகங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களைப் பதிவு செய்து ஒழுங்கு படுத்துதல்.
4. சுயக் கட்டுப்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்தலும்
5. பத்திரச் சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளைத் தடை செய்தல்.
6. முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தல் மற்றும் இடைத்தரகர்களுக்கான பயிற்சி அளித்தல்.
7. பத்திரங்களுக்கான உள் வணிகத்தைத் தடை செய்தல்.
8. பங்குகளைக் கணிசமான அளவில் வாங்கி, நிறுமங்களை எடுத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்துதல்.
9. பங்கு மாற்றகங்களிலிருந்து அவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது, பங்கு மாற்றங்களைப் பரிசோதனை செய்தல், விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்.
10. மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணிகளைச் செய்தல்.

**பங்கு மாற்றகத்தின் மீதான செபியின் அதிகாரங்கள் :**

செபி சட்டம் கீழ்காணும் அதிகாரங்களைச் செபிக்கு வழங்கியுள்ளது.

1. பங்கு மாற்றகத்திடமிருந்து பருவகால அறிக்கைகளைக் கோருதல்.
2. சில ஆவணங்களைப் பராமரிப்பது குறித்து பங்கு மாற்றகங்களுக்கு வழிமுறைகளை வகுத்தளித்தல்
3. பங்கு மாற்றகங்களின் அலுவல்கள் குறித்து பங்கு மாற்றங்களையோ அல்லது அதன் உறுப்பினரையோ அழைத்து விவரம் கோருவது.
4. பங்குகளைப் பட்டியலிடக் கோரி பொது நிறுமங்களைக் கட்டாயப்படுத்துதல்.

**67. (அ) தனி வரையறு நியமத்திற்கும் பொது வரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள்**

| வ.எண் | பொருள் | கூட்டாண்மை நிறுவனம் | கூட்டுப்பங்கு நிறுமம் |
|---|---|---|---|
| 1. | பொருந்தக் கூடிய சட்டம் | 1932–ஆம் ஆண்டைய கூட்டாண்மைச் சட்டம் கூட்டாண்மை நிறுவனங்களைக் கட்டுப்படுத்தியது. | நிறுமங்களை பொருத்தவரை பெரும்பாலும் 1956–ம் ஆண்டைய நிறுமங்கள் சட்டம் கட்டுப்படுத்துகிறது. |
| 2. | பதிவு செய்தல் | நிறுவனப் பதிவாளரிடம் கூட்டாண்மை நிறுவனம் ஒன்றைப் பதிவு செய்தல் கட்டாயமன்று. கூட்டாளிகள் விரும்பின், பதிவு செய்து கொள்ளலாம். | நிறுமப் பதிவாளரிடம் நிறுமங்ளை பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 3. | எண்ணிக்கை | கூட்டாண்மையைத் தொடங்க குறைந்தது இருவர் தேவை, வங்கித் தொழில் செய்ய, அதிகபட்சம் 10க்கு மிகாமலும், பிற தொழில்களாயின் உயர்ந்தளவு 20க்கு மிகாமலும் இருக்க வேண்டும் | தனி வரையறு நிறுமத்தைத் தொடங்க குறைந்தது இருவரும், பொது வரையறு நிறுமத்தைத் தொடங்க குறைந்தது 7 பேரும் தேவை, பொதுவரையறு நிறுமத்தில் உச்ச எண்ணிக்கைக்கு வரம்பு இல்லை. ஆனால் தனி வரையறு நிறுமத்தைப் பொருத்தவரை, உச்ச வரம்பு 50 பேர் ஆகும். ஆனால் இதில் தற்பொழுது அல்லது முந்தைய ஊழியர், உறுப்பினர்களைச் சேர்க்கக் கூடாது. |
| 4. | சட்டத் தகவுடைமை | கூட்டாண்மை நிறுவனத்திற்குச் சட்டப்படி தனியாள் தன்மை இல்லை. கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்தே நிறுவனம் ஆகின்றனர். அதாவது கூட்டாண்மையைக் கூட்டாளிகளிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. | நிறுமம் சட்டம் உருவாக்கிய ஒரு செயற்கை நபர். அதன் உறுப்பினர்களிடமிருந்து தனித்து இயங்குகிறது. |
| 5. | பொறுப்பு | கூட்டாளி ஒருவரின் பொறுப்பு கூட்டானது, தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாவர். அதுவுமின்றி வரையறாப் பொறுப்புடையது. நிறுவனத்தின் கடன்களைத் தன் தனிப்பட்டச் சொத்துக்களை விற்றாவது அடைக்க வேண்டும். | பங்குநர் ஒருவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகை அளவே அவருடைய பொறுப்பு உள்ளது. முழுப் பங்குத் தொகையையும் செலுத்தி விட்டால் பொறுப்பு முழுவதும் நீங்கி விடுகிறது. சொத்துக்கள் எவ்வளவு இருப்பினும், கடன்களை அடைக்க அவற்றை விற்கத் தேவையில்லை. |
| 6. | பங்கு மாற்றம் | கூட்டாண்மை நிறுவனத்தில் தனக்குள்ள உரிமையைப் பிற கூட்டாளிகளின் இசைவின்றி, வேறு எவர்க்கும் மாற்றித் தர இயலாது. | பொது வரையறு நிறுமங்களில், பங்குகள் தடையின்றி மாற்றக் கூடியவை. ஆனால் தனி வரையறு நிறுமங்களில், பங்கு மாற்றத்திற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. |
| 7. | மேலாண்மை | அனைத்துக் கூட்டாளிகளுமோ, அல்லது அவர்கட்குப் பதிலாக அவர்கள் சார்பில் சிலராலோ கூட்டாண்மை நிர்வாகம் செய்யப்படுகிறது. அதாவது நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமை ஒவ்வொரு கூட்டாளிக்கும் உண்டு. | கூட்டுப் பங்கு மேலாண்மையில் பங்குநர்கள் நேரடியாகப் பங்கேற்க முடியாது. அவர்கள் தேர்ந்தெடுக்கும் இயக்குநர் அவையிடம் நிறும மேலாண்மை ஒப்படைக்கப்படுகிறது. |
| 8. | நீடித்த வாழ்வு அல்லது நிலைத்தன்மை | கூட்டாண்மை நிறுவனம் நிலையாத தன்மை உடையது. இறப்பு, சமமன நிலை இழப்பு, நொடிப்பு நிலை அடைதல் போன்ற எந்நிகழ்வும் கூட்டாண்மையைக் கலைக்கவல்லது. | கூட்டாண்மையைக் கலைக்கும் எந்நிகழ்வுகளும் கூட்டுப் பங்கு நிறுமத்தைக் கலைக்காது. காரணம் நிறுமம் வேறு. அதன் உறுப்பினர்கள் வேறு. |

| | | | |
|---|---|---|---|
| 9. | நெறிமுறைச் சிக்கல்கள் | கூட்டாண்மையைத் தொடங்குவதும், கலைப்பதும் எளிது. சட்டச் சிக்கல்கள் இல்லை. | கூட்டுப் பங்கு நிறுமத்தைத் தொடங்குவது உட்பட, கலைத்தல் வரை பின்பற்ற வேண்டிய சட்டச் சிக்கல்களும் வழிபற்ற வேண்டிய சட்டச் சடங்குகளும் மிகவும் அதிகம். |
| 10. | நிதி ஆதாரங்கள் | கூட்டாளிகள் போடும் முதல் தொகையும், திரட்டும் கடன் அளவும் மிகப் பெருமளவில் இருக்காது. | மிகப்பெரும் முதலைத் திரட்டவும் மிக அதிகமாக கடன் பெறும் திறனும் நிறுமங்கட்கு உண்டு |

67. (ஆ)

**இயக்குநர்கட்குரிய அதிகாரங்கள் :**

1. **பொது அதிகாரங்கள் :**
நிறுமம் எச்செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ, அந்த அனைத்துச் செயல்பாடுகளில் ஈடுபடவும், அவற்றிற்கு வேண்டிய அதிகாரங்களைப் பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்குநரவைக்கு உரிமை உண்டு. ஆயினும் நிறுமம் எச்செயலையாவது பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படிதான் செய்ய வேண்டும் என்றிருப்பின், அதனை இயக்குநர் தானே செய்யக்கூடாது.

2. **சட்டமுறை அதிகாரங்கள் :**
இயக்குநர் அவைக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி, கீழ்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
   1. அழைப்புப் பணம் செலுத்துமாறு கோரிட
   2. கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட
   3. கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற
   4. நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய
   5. கடன் வழங்க.

3. **இயக்குநரவைக் கூட்டத்தில் பயன்படுத்தக் கூடிய பிற அதிகாரங்கள் :**
   1. இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின், அதனை நிரப்ப.
   2. செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், கூடுதல் இயக்குநர்களை நியமித்துக் கொள்ள.
   3. செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்க.
   4. எந்த ஒரு இயக்குநரோ, அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்கு அனுமதி வழங்க
   5. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாயம் சதவிகிதத்தைக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்க.
   6. அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய
   7. நிறுமத்தின் முதலாவது தணிக்கையரை நியமிக்க.
   8. பதவி விலகலாலன்றி வேறு காரணத்தால் தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப.

4. **இயக்குநர் அதிகாரங்களில் கட்டுப்பாடு :**
இயக்குநர் அவைகட்கு அதிகாரங்கள் நிரம்ப இருப்பினும் கீழ்க்கண்ட அதிகாரங்களைப் பங்குநர் பொதுக் கூட்டத்தின் இசைவு பெற்றாலொழிய பயன்படுத்த முடியாது. அதாவது, தாம் விரும்பியவாறு இயக்குநர்கள் செயல்பட முடியாது, பங்குதாரர்களின் ஒப்புதலுடன் தான் செயல்பட முடியும்.
   1. நிறுமத்தின் தொழில் முழுவதையும் அல்லது மிகப் பெரும்பான்மையானதை விற்க, குத்தகைக்கு விட அல்லது வேறுவகையில் பயன்படுத்த.
   2. இயக்குநர் ஒருவர் தர வேண்டிய கடனுக்குத் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவை நீட்டிக்க.
   3. முன்னரே வாங்கப்பட்ட கடன் தொகையுடன் தற்பொழுது வாங்கவுள்ள கடனையும் சேர்த்தால், அது நிறுமத்தின் செலுத்தப்பெற்ற முதல் தொகையும் காப்புத் தொகையும் சேர்த்த தொகைக்கு அதிகமாயிருப்பின், தற்பொழுது திட்டமிட்டுள்ள கடன் பெற.
   4. குறிப்பிட்ட வரம்பு கடந்து அறக்கொடை வழங்க.

❁❁❁❁